விலை ரூபா 1-25

# ஈழநாடு


THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] தை 9 ரபி - ஆகி 30 இதழ் 338
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-1-85


## "பிரிவினைவாதிகளுடன் பேச்சு நடத்தமாட்டேன்!"

### ஜனாதிபதி ஜே. ஆர். அறிவிப்பு

[கொழும்பு]

''நாட்டைப் பிளவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செயல்பட்டுவரும் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்த நான் விரும்பவில்லை''

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று ஆனமடுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச பாடப்புத்தகங்கள் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இடமில்லை.

''வடபகுதியில் அரசாங்கம் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

''இனவிகிதாசார அடிப்படையில் நாட்டின் அரசாங்கக் காணிகளில் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன'' என்றார்.

இக்குடியேற்றங்கள் இன,

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## இலங்கை தமிழர் படுகொலையைக் கண்டித்து மதுரையில் மாணவர் இன்று ஊர்வலம்!

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து மதுரையிலுள்ள அனைத்து கல்லூரி மாணவர்களும் ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

மதுரையில் இன்று மாலை நடைபெறவுள்ள இந்தப் பிரமாண்டமான கண்டன ஊர்வலத்தில் லட்சக் கணக்கான மாணவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்தும் கலந்து கொள்ளவுள்ள கருத்தரங்கு ஒன்றையும் மதுரை அனைத்துக் கல்லூரிகளினதும் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஈழவிடுதலை இயக்கங்களின் ஒற்றுமை குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

## கிளிநொச்சி, பருத்தித்துறையில் நேற்று

# ராணுவம்சூட்டில் 10 பேர் பலி!

(கிளிநொச்சி, புலோலி நிருபர்கள்)

**கிளிநொச்சியிலும், பருத்தித்துறையிலும் நேற்று ராணுவம் சுட்டதில் பத்துபேர் கொலையுண்டார்கள். பலர் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

கிளிநொச்சிநகர்நேற்றுபிற்பகல்அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. மக்கள் சிதறி பாதுகாப்புதேடி ஓடினார்கள். கண்டபடி சுட்டார்கள்.

பருத்தித்துறையிலும் நேற்றுப் பிற்பகல் வாகனத்தில் சென்ற ராணுவத்தினர் சுட்டார்கள்.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று சுமார் ஐந்துபேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

முறிகண்டி குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்துநேற்று இப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்தன. அப்போதே இச்சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றன.

கிளிநொச்சி கரடிப்போக்கு என்ற இடத்தில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் பஸ்நிலையத்தில் ஒருவரும் பிரதான வீதியில் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி, மாங்குளம், முறிகண்டிப் பகுதியில் ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து பலத்த பதட்டமும்

(3-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க)

## தமிழக மீனவர்மீது துப்பாக்கிச் சூடு!

### இலங்கை கடற்படை நடத்தியது!

(சென்னை)

கடந்த இரண்டு வாரங்களாக கடலுக்கு செல்லாதிருந்த தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் மீன்பிடிக்க சென்றபோது இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகியுள்ளனர்.

தமிழக மீனவர்களின் படகு மீது இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினமும் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் காயமடைந்தார். இன்னுமொரு படகிலிருந்தவர்கள் பலத்த தாக்குதலுக்குள்ளானார்கள்.

## மற்றொரு இளைஞருக்கும் நேற்று 'மரணதண்டனை'

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்று மற்றொரு இளைஞருக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது.

யாழ் வெலிங்டன் சந்தியில் மின்கம்பத்துடன், இளைஞரின் சடலம் நேற்றுக்காலை கட்டப்பட்டிருந்தது.

இந்த இளைஞர் கண்கள் கட்டப்பட்ட நிலையில், சிவப்புகோடு சாரமும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். கைகள் மின்கம்பத்துடன், பின்பக்கமாக கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது

கொள்ளைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டாரென்றும், பல தடவை எச்சரிக்கப்பட்டதாக

(3-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)


## மலிபன் பிஸ்கற்ஸ்

### விற்பனையாளர்களுக்கு

## ஓர் அறிவித்தல்

எம்மிடம் மலிபன் பிஸ்கற் வகைகள் கையிருப்பில் உண்டு. விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. தங்கள் தேவைக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

## ஞானம்ஸ் றேட்ஸ்

(உத்தரவுபெற்ற விநியோகஸ்தர்கள்)

251, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23019

1465


### இதுவரை 44 சடலங்கள்!

[கொழும்பு]

முறிகண்டி ரயில் விபத்தில் இதுவரை 44 சடலங்கள் இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும், இதில் 33 சடலங்கள் ராணுவ வீரர்களுடையது என்றும் பாதுகாப்பு அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்தன.

## முறிகண்டி ரயில்விபத்து

## இடிபாடுகளுக்குள் பெறுமதியான பொருட்கள்!

[யாழ்ப்பாணம்]

முறிகண்டியில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்பினால் சுமார் கால்மைல் தூரமான ரயில்பாதை படுமோசமாகச் சீர்குலைந்துள்ளது.

சட்டுக், கட்டுகளாக டைனமைற் வெடிகள் பலவும் வெடிக்க வைக்கப் படாத நிலையில் அப்பாதையில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கக் காணப்பட்டன

சேதமடைந்த ஒவ்வொரு ரயில் பெட்டியும் புதியனவென்றும், பலலட்ச ரூபாய்கள் பெறுமதியானவையென்றும் கூறப்பட்டது.

ரயில் பாதையிலிருந்து சில

(4-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

### 'அந்த' பஸ்ஸில் பயணம்செய்தோர் இறக்கப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

வவனியாவுக்கு அண்மையில் ஈரப்பெரியகுளம் என்னுமிடத்தில் இடைமறிக்கப்பட்ட பஸ் ஒன்றிலிருந்து தமிழ்ப்

(3-ம் பக்கம் 5-ம கலம் பார்க்க)

## 'ரெலோ' உரிமை கோருகிறது!

[கிளிநொச்சி]

முறிகண்டிக்கும் கொக்காவிலுக்குமிடையில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ரயில்குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு தமிழீழ விடுதலை இயக்கம் [ரெலோ] உரிமைகோரி கிளிநொச்சியில் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது. அச்சுவரொட்டியில், ''பளைக்கும் ஆனையிறவுக்குமிடையில் ரயில் தண்டவாளத்தை தகர்த்து, பரந்தனில் வீதியையும்தகர்த்து, கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் மக்களை ரயிலில் ஒட்விடாது பாதுகாத்து. பொது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல் எமதுதிட்டத்தை நிறைவேற்றி, அரச பயங்கர

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டு பாவனைக்குரிய தேக்கு அலுமாரி, கண்ணாடி மேசைகள், செற்றிகள், அலுவலக சாப்பாட்டு மேசைகள், நாற்காலிகள், புஸ்தக அலுமாரி முதலியன உடன் விற்பனைக்குண்டு. சபாரட்ணம் 40 ரக்கா லேன், சுண்டிக்குளி.
1429

நீர்வேலி இராச வீதியில் 100 M (மீற்றர்) அருகே 24 பரப்பு பனங்காணி (சிறந்த தோட்ட நிலம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. சிவகுமார், அபிவிருத்தி சபை, கொக்குவில் 1458

வீடு, கிணறு, தண்ணீர்த் தாங்கி ஆகியவற்றுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் நேரில் வரவும். வி ரி. சிங்கராசா, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 1463

கே. கே எஸ். வீதியில், முட்டாஸ் கடை சந்தியிலிருந்து சத்திரச் சந்திக்கிடையில் ஒரு கடை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 148, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
1459

## தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த அரசாங்க உயர் உத்தியோகத்தர் தனது 27 வயதுடைய அழகான வேலைபார்க்கும் மகளுக்கு தகுதியான மணமகனைத் தேடுகின்றார். நியாயமான சீதனம் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 14 7 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1457

## தேவை

காருடன் மாற்றுவதற்கு உழவுயந்திரம் சகல இணைப்புக்களுடன் தேவை. உப தபால் கந்தோர், பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டை, தொ. பேசி. இல. 23001.
1460

வரையுள்ள
**நெடுந்தீவு பலநோக்குக் கூட்றவுச் சங்கம் நெடுந்தீவு**
(யா 1662 — 5-12-79)

## அங்கத்தவர் இடாப்பு

31-12-1984ம் ஆண்டு வரையிலான பூரண அங்கத்துவம் பெற்றோரின் உறுப்புரிமைப் பட்டியல் சகல கிளைகளிலும் தலைமைச் செயலகத்திலும் வைக்கப்பட்டுள்ளது

அங்கத்வர்கள் இடாப்பை நன்கு பார்வையிட்டு திருத்கள் இருப்பின் 31-01-1985க்குள்விண்ணப்பிக்கும்படி மிகத் தயவாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒப்பம்

இரா. தர்மலிங்கம்'
செயலாளர்.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு.
15-01-1985 1456

## FOR SALE

'Alkathene' pipe ½ (Half inch) A chemanex- Product Could Be Used For Irrigation, As Well As A Cover For Electric Wires, Our Selling Price- RS 8/- Per metre At Samuel, Sons And Company Limited, 206, 208 Hospital Road, Jaffna.
1462

## சிறுகதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கோகிலா மகேந்திரன், புலோலியூர் ஆர். இரத்தின வேலோன் ஆகியோரின் 'அறிமுக விழா' என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா திரு. வே. கந்தையா தலைமையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளது.

# தமிழ்தான் உலகின் தாய்மொழி என்றவர் சுவாமி ஞானப்பிரகாசர்!

சங்கம் வளர்த்த தங்கத் தமிழ், ஈழத்திருநாட்டில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக கன்னித்தன்மையுடன் வளர்ந்து வருகிறது இன்பத் தமிழை இனிதுற வளர்க்க பல வழிகளிலும் முன்னின்ற அறிஞர்கள், புலவர்கள் ஆற்றிய பணிகள் சொல்லுந்தரமன்று. அவர்களின் வரிசையிலே தோன்றியவர் தான் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். தமிழ் பேசும் நல்லுலகாம் யாழ்நகரின் மானிப்பாய் பெற்ற மாபெரும் மேதை

சிறுவயதிலேயே கத்தோலிக்க மறையிற் சேர்ந்து ஞானப்பிரகாசர் எனும் பெயரைப் பெற்றார். கசடறக் கற்று, வித்தகனாக வந்த அவர் மதத்திலே கொண்ட பற்றினால் தாம் வகித்துவந்த பதவியைத் துச்சமென மதித்து, அதனைத் துறந்து துறவியானார். குருத்துவத் திருநிலைப்படுத்தலின் பின்பணி செய்வதே தன் கடன் என்றவாறு தம்மை முற்றாக அதிலே ஈடுபடுத்திக் கொண்டார்.

மதப்பெரியாராகவும், மொழியியல் வல்லுனராகவும் விளங்கிய இவ் வித்தகர் தமிழ் மொழியையும், திருமறையையும் தம்மிரு கண்களாகப் போற்றினர். அகில உலகும் புகழ் பரப்பிய ஈழத்தின் அருந்தவப் புதல்வரான இவர் சொற்புறப்பியல் ஆய்வு. திராவிட மொழிக் குடும்பம், இந்தோ ஐரோப்பிய மொழிகள் என

## இன்று நினைவு தினம்

பன பற்றித் துருவித்துருவி ஆராய்ந்து இம் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் மொழி தான் என்று இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் சான்று பகர்கின்றன. உலக மொழியியல் அறிஞர்களான கார்டுவெல், பேராசிரியர் எமனு, பேராசிரியர் வரோ ஆகியவர்களின் வரிசையில் மதிப்புடன் நிற்கக்கூடிய பெருமை இவருக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்தது. இவர் எழுதிய மொழியியல் ஆய்வுக் கட்டுரையும். சொற்பிறப்பியல் தமிழகராதியும் ஆகும்.

வித்தகச் செம்மல் மொழி வல்லுனர், பன்மொழிப் புலவர், ஒப்பியல்ஞானி, தத்துவப் போதகர் இப்படிப் பல பெயர்களால் அழைக்கப்பட்ட சுவாமிகள் 1947ம் ஆண்டுதைத் திங்கள் 22ம் நாள் இம் மண்ணுலகை விட்டு அமலனடி எய்தினர்.

–ரவி, மல்லாகம்

# 'திருமுறையின் பெருமையை பரப்பியவர்'

[சுழிபுரம்]

''திருநெறிக் கழகம் அமைத்து திருமுறை மாநாடு நடாத்தி குன்றக்குடி அடிகளார் மூலமாக பன்னிரு திருமுறையின பெருமையை இலங்கையில் பல பாகங்களில் விதைத்து அறுவடை கண்டவர் அமரர் முதலியார் செ. சின்னத்தம்பி பல பொதுப் பணிகளில் ஈடுபட்டு பல முக்கிய பதவிகளை வகித்து தொண்டுகள் செய்து வந்த காலத்தில், பல முன்மாதிரிகளைசெய்து காட்டியவராவர். இவர் செந்தமிழ் செல்வராகவும், திருமுறைப்பிரியராகவும் வாழ்ந்து யாவருக்கும் இனியவராக வாழ்ந்தவராவர்''

இவ்வாறு திரு. இ அப்பாத்துரை பண்ணாகம் சத்சங்க வட்டத்தினர் நடாத்திய முதலியார் சின்னத்தம்பி நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். வட்ட இயக்குநர்திரு. க. வாமதேவன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது கூட்ட ஆரம்பத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. செ சுவாமிநாதன் யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் யாழ். மாவட்ட உணவு போஷாக்கு, மகளிர் பணியகம், சனத்தொகைப் பிரிவு, குழந்தைகள் செயலகம், மனித வலுத்திட்டமிடல் பிரிவு ஆகியவற்றிற்குப் பொறுப்பாகக் கடமையாற்றுவார். (ப)

## ஓய்வு பெற்றார்

(சுழிபுரம்)

மூளாய் கிராம சேவை அலுவலராகக்கடமையாற்றிய திரு. எஸ். கந்தசாமி தமது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார் இவர் முன்பு மானிப்பாய், வட்டுக் கிழக்கு ஆகிய பகுதிகளில் கடமையாற்றியவராவர்.

## உணவுப்பங்கீட்டு அட்டைகள் விநியோகம்!

[யாழ்ப்பாணம்]


உணவுப் பங்கீட்டு அட்டைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதுவரை தமது உணவுப் பங்கீட்டு அட்டைகளைப் பெறாதவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்

ப நோ கூ சங்கங்கள் மூலம் கிளைச்சங்கங்களுக்குவிநியோகிக்கவெனப் போதுமானளவு உணவுப்பங்கீட்டு அட்டைகள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் அனுப்பப்பட்டுள்ளன. (கி)

## 31ம் நாள் நினைவஞ்சலி

**பொன்னையா தருமலிங்கம்**

(இராமநாதபுரம்)



மலர்வு:
01-06- 1956
உதிர்வு:
22-12- 1984

ஆருத்துயரினில் எமையெல்லாம் ஆழ்த்திவிட்டு மீளாத் துயிலினையே நீ கொண்டாய் ராசாவே. நாளாந்தம் உன் நினைவால் நாமெல்லாம் வாடுகின்றோம். மின்னலென நீ மறைந்து நமை நாளும் வருத்துகின்ற கோரப் பிரிவதனை கூற்றுவன் ஏன் நமக்களித்தான். உன் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டும்.

பெற்றோர்- சகோதர சகோதரிகள்- மைத்துனர்- மைத்துனிமார்- மக்கள்- மருமக்கள்- உறவினர்.

(1452)

## நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலயத்தில் படித்த இளம் விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 28ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குறுகிய கால விவசாயப் பயிற்சிக்கு விண்ணப்பிக்காதவர்களும் தகுதியுள்ளவர்களாயின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று விவசாய உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சிக்கு அதிகமாகப் படித்த இளம்பெண்களே விண்ணப்பித்திருப்பதாகவும் அவ் உத்தியோகத்தர் சொன்னார்.

## பாடசாலை வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்மாதம் 21ம் திகதி முதல் 25ம் திகதிவரை பாடசாலை வாரம் கொண்டாடப்படவுள்ளது.

பாடசாலைகளைத் துப்புரவு செய்தல், மரம் நாட்டுதல், சிரமதானப் பணிகள், நூல் நிலைய விரிவாக்கல் ஆகியவற்றை மாணவர்களிடையே உணரச்செய்தலே பாடசாலை வாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

1 ஸ்பெயின் . பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.



AIR-TRANSIT
ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99- 2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

**பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர**
பல்கலைக்கழகங்களின் (வெளிநிலை) விரிவுரைகள்
கல்வியாண்டு 1985/86

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிநிலைபாட நெறிகளான
★ கலைமாணி ★ விஞ்ஞானமாணி(புள்ளிவிபரவியல்)
★ சட்டமாணி ★ வணிகமாணி

க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்

வின்ணப்ப முடிவு திகதி 31–1–1985

விபரங்களையும்விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 5/- செலுத்தி நேரில்/தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: விண்ணப்பங்களை பூர்த்திசெய்து அனுப்பும் முதல் 150 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.23715

(1461)

# வண. பிதா. பஸ்ரியன் கொலை: ‘பாதுகாவலன்’ தகவல்!

வங்காலையில் பலியான வண. பிதா மேரிபஸ்தியனின் கொலை பற்றிய விபரம் ஒன்றைச் “சாட்சிகளின் கூற்றிலிருந்து” என்ற தலைப்பில் பாதுகாவலன் பத்திரிகை 18-1-85 ஆம் திகதிய இதழில் வெளியிட்டுள்ளது அதனை அப்படியே இங்கு தருகிறோம்.

[ஆ—ர்]

5-1-85 பி. ப. 6 மணி ஊரடங்கு: அருள்திரு மேரி பஸ்தியனும், கூனைச் சிறுவன் அழகரட்ணமும், மற்றொரு உதவியாளன் நாதன் குரூஸ் என்ற இளைஞனும் வங்காலைக் கோவில் குருமனையில் இருந்தனர்.

நள்ளிரவுக்கு மேல் வங்காலைக் கிராமத்தை நோக்கி வாகனங்கள் வந்து கோவில் முன் வாயிலில் தரித்தன.

ஆயுதப்படையினர் கால் நடையாகக் கோவில் வளவுக்குள் பிரவேசித்தனர்.

துருப்புக்கள் துப்பாக்கிவேட்டுக்கள் தீர்த்து கோவில் வளவைச் சுற்றிக்கொண்டனர்

ஆயுதப்படையினர் வளவின் பின்வாசல் வழியாக வந்து குருமனையின் பின் விருந்தையை அடைந்தனர்.

ஆயுதப்படையினர் கதவைத் தட்டி அருட்திரு பஸ்தியனைக் கூப்பிட்டனர். அருட்திரு பஸ்தியன், குருவுக்குரிய வெண்ணுடையில் திருச்செபமாலையைக் கையிலேந்திக் கொண்டு அழகரட்ணம், நாதன் குரூஸ் ஆகியோர் உடன்வர, படுக்கை அறையிலிருந்து அலுவலக அறைக்குள் வந்தார்.

பின்விருந்தையிலிருந்து யன்னலூடாக ஆயுதப் படையினரால் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அருட்திரு பஸ்தியன் “பிளீஸ் பிளீஸ்” என்றார்.

அருள்திரு பஸ்தியனுக்கும் அழகரட்ணத்துக்கும் சூடு விழுந்தது. ‘அம்மா’ எனச் சத்தமிட்டு குருவானர் வீழ்ந்தார்.

படையினர் அலுவலகஅறையின் பின் விருந்தைக் கதவை உடைத்து உட்புகுந்து அருள் திரு பஸ்தியன் அவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

அத்துடன் அழகரட்ணமும் நாதனும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

கோவில் வளவைச் சுற்றி வந்து வேட்டுக்களைத் தீர்த்தனர். 72 வயது மூதாட்டியும் கொல்லப்பட்டார்.

அதிகாலை 4 மணியளவில் அருள்திரு பஸ்தியன் அவர்களுடைய உடல் பின் வாசல் வழியாக இழுத்துக் கொண்டு போகப்பட்டு, கன்னியர்மடத்தின் அருகிலுள்ள பெண்கள் பாடசாலைப் பழைய கட்டடப் படிகளில் போடப்பட்டது.

அழகரட்ணம், நாதன் குரூஸ் இருவருடைய உடல்களும் குருமனையிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டன.

காலை 5 மணியளவில் அருள் திரு. பஸ்தியன் அவர்களுடைய உடலை சீருடையணிந்த மூவர் தூக்கிப்போய் வான் ஒன்றில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

மண்ணெண்ணெய்த் தகரங்கள் நான்கில் ஒன்றிலிருந்து, மண்ணெண்ணை குருமனைக்குள்ளிருந்த இரத்தக் கறைகளிலே ஊற்றப்பட்ட பின் தகரம் பின் விருந்தையில் கிடக்கக் காணப்பட்டது

அருட் சகோதரிகளும் மடத்தில் வாழும் பெண் பிள்ளைகளும் ஆயுதப் படையினரால் மண்டப வாயிலினூடாக கோவிலுக்குள் அனுப்பப்பட்டனர்.

மகளிர் பழைய பாடசாலைக் கட்டத்தில் இரவு தங்கியிருந்த கிராமவாசிகள் சிலரும் கோவிலுக்குள் அனுப்பப்பட்டனர். அவர்கள் பாடசாலைக் கட்டட வாயில் படிந்த இரத்தக்கறை அவதானித்துள்ளனர்.

ஆயுதப் படையினர் கன்னியர் மடத்தினுள் பிரவேசித்து முழுஇடமும் தட்டிக் கொட்டி ஆராய்ந்தனர். கைக்கடிகாரங்கள் பணம் வேறு பொருட்களை எடுத்துச் சென்றதுடன் மடத்துச் சிற்றாலயத்துள் சென்று நற்கருணைப் பேழையைத் திறந்து திருப்பாத்திரத்தையும் தீண்டியுள்ளனர்.

இராணுவ வாகனங்கள் கோவில் வளவுக்குள் [பின்பக்கம் வரை] சென்றன.

காலை 7-30 மணியளவில் வாகனங்கள் வெளியேறின.

மு. ப. 11 மணியளவில் ஒன்பது சடலங்கள் மன்னார் வைத்தியசாலை பிரேதக் காப்பிடத்தில் ஒப்படைக்கப்பட்டன

அருள்திரு. பஸ்தியன் அவர்களுடைய உடல் கொடுக்கப்படவில்லை.

(நன்றி -பாதுகாவலன்)


றீகல் மினி

தினசரி 10-15, 1-15 மட்டும்.

விஜயகாந், விஜி, நம்பியார் நடிக்கும்

பி. எஸ். வீரப்பாவின்

சாட்சி



லிடோ சினிமா

தினசரி 10-30, 2-00

MISSION BATANGAS

(War Film - Action packed)

வெலிங்டன்:

(யாழ். நகர்)

10-30, 2-15,

கமல் - மாதவி

டிக் டிக் டிக்

(கலர்)


## கைதடி பாலத்தை இளைஞர் திருத்தினர்

[சாவகச்சேரி]

அண்மையில் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட பலங்களில் ஒன்றான கோட்பாய் கைதடி பாலம் இளைஞர்களினால் நேற்று திருத்தியமைக்கப்பட்டது.

உழவுயந்திரங்கள் சகிதம் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சிரமதானமூலம் இப்பாலத்தை திருத்தி அமைத்தனர்.

## றீகன் பதவிப் பிரமாணம்

வாஷிங்டன் ஜன. 21

அமெரிக்காவின் 50 வது ஜனாதிபதியாக திரு. றொனல்ட் றீகன் நேற்று 2 வது முறையாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்

திரு. றீகன் (73 வயது) அமெரிக்காவின் வயது முதிர்ந்த ஜனாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

## கிளிநொச்சி...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

பீதியும் காணப்பட்டன.

நேற்று இராணுவத்தினர் கிளிநொச்சிப் பகுதியில் திடீர், திடீரென துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டு நடமாடினர்.

இதனால் கடைகள் பூட்டப்பட்டு மக்கள் நடமாட்டம் ஸ்தம்பித்திருந்தது.

முறிகண்டிப்பகுதியில் ரயில் குண்டுவெடிப்பு இடிபாடுகளை அப்புறப்படுத்தும் வேலைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இப்பணிகளை மேற்பார்வையிடகணிசமானளவில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேலும் இராணுவ கெடுபிடிகள் கிளிநொச்சி மற்றும் வன்னிப்பகுதிகளில் இடம்பெறலாம் என பொது மக்கள் மத்தியில் பலத்த அச்சம் நிலவுகிறது.

### பருத்தித்துறையில்

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று இராணுவம் சுட்டதில் 5 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமடைந்து ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பஸ் டிப்போ வரை இராணுவத்தினர் தொடர்ச்சியாக தமது வாகனங்களில் இருந்து சுட்டவாறு சென்றனர். இச் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தின்போதே பலர் சுடப்பட்டனர்

கொல்லப்பட்டவர்கள் வீதியால் நடந்துசென்று கொண்டிருந்த பாதசாரிகள் என்று கூறப்பட்டது

காயமடைந்தவர்களில் 3 பேர் அவர்களின் உறவினர்களால் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


L. B. GAS

எங்களிடம் கைவசம் உண்டு.

எல்லா நாட்களிலும் சனி, ஞாயிறு, போயா லீவு நாட்களிலும் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையிலும் L. B. GAS விற்கப்படும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


# இப்படியும் நடக்கிறது

அபிவிருத்தி லொத்தரில் அதாவது ‘சுரண்டல்’ லொத்தரில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

யாழ். நகரில் விற்பனை செய்யப்பட்ட மேற்படி லொத்தர் டிக்கட்டை ஒருவர் வாங்கினார். சுரண்டினார். என்ன ஆச்சரியம். சுளை சுளையாக எண்ணக்கூடிய ரொக்கம் கிடைத்தது!

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலத்துக்குப் பின்னர் மேற்படி லொத்தரில் பரிசுபெற்றவர், வேலணை சோதிடர் வி. ஏ. சிவராசா.

காதோடு காதாக: டிக்கட்டை இவர், இரு காலும் இழந்த ஒரு விற்பனையாளரிடம்தான் வாங்கினாராம். மற்ற விஷயம்— டிக்கட்டின் இலக்க எண்களைக் கூட்டிப்பார்த்து எண் சோதிடப்படி தான் அவர் வாங்கியிருக்கிறார்!

—ஊருளி

## “இலங்கை மாலுமிகள் விவகாரம்— இந்திய மத்திய அரசு தீர்மானிக்கவேண்டும்”

### அமைச்சர் நெடுஞ்செழியன் கூறுகிறார்

(சென்னை)

“இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மாலுமிகளின் விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசுதான் தீர்மானிக்கவேண்டும்.”

இவ்வாறு தமிழ்நாடு நிதியமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் நேற்றுமுன் தினம் மதுரையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கைக் கடற்படை மாலுமிகள் மதுரையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தியக் கடலோரக் காவற் படையினராற் கைப்பற்றப்பட்ட இலங்கைக் கடற்படை ரோந்துப் படகு பாம்பன் துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

“இலங்கையில் காவலில் வைக்கப்பட்டுள்ள 17 இந்திய மீனவர்களையும் பாதுகாப்பாக உடனடியாக விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

“தமிழ்நாட்டின் 7-வது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு பற்றி ஆராய்வதற்காக தமிழ் நாடு அமைச்சரவை நாளை புதன்கிழமை கூடவுள்ளது.”

“புதுடில்லியில் நடைபெறவுள்ள தேசிய வளர்ச்சி சபைக் கூட்டத்தில் எடுத்துரைக்கப் படவுள்ள தமிழ்நாட்டின் திட்டங்கள் பற்றியும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது” என்றார். (வெ)

## அந்த பஸ்ஸில்..

[1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி]

பயணிகள் அனைவரும் இறக்கப்பட்ட போதிலும் அந்த பஸ்ஸில் அவர்கள் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தப் பயணிகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவில்லை.

## இலங்கை மீனவர் நால்வர் கைது

(சென்னை)

தனுஷ்கோடிக்கும் ராமேஸ்வரத்திற்குமிடையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவல்படையினரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ராமநதபுரம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நால்வர் மீதும் இந்திய பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படவுள்ளது. (வெ)

## கிரிக்கெட் இலங்கை வெற்றி

[மெல்பேன்]

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மட்டுப்படுத்தப்பட்ட உலக வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், அவுஸ்திரேலியாக் கிரிக்கெட் கோஷ்டியை இலங்கை கிரிக்கெட் கோஷ்டி தோற்கடித்தது.

## மற்றொரு...

(1ம்பக்க 4ம்கலத் தொடர்ச்சி)

வும் தெரிவித்து அருகிலுள்ள சுவரில் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது

காரைநகரைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவருக்கு மரண தண்டனை வழங்குகிறோம். தமிழீழ செம்படை [இராணுவ பிரிவு] எனச் சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல்வரை சடலம் மின்கம்பத்திற்கு அருகில் காணப்பட்டது. (க)

## இதுவரை 10,200 சைக்கிள்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் நேற்று மட்டும் சுமார் 1000 சைக்கிள் வரிபத்திரம் வழங்கப்பட்டது.

இதுவரை 10,200 சயிக்கிள் வரிபத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. [க]

## துப்பாக்கி முனையில் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் நேற்றுக்காலை இரு மினிவான்கள் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது இனந்தெரியாதவர்களால் இந்தவான் கடத்தப்பட்டதாக கூறப்பட்டது. (க)

## வங்கியில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியிலிருந்து ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இரு மினி பஸ்களில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினரே இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது.

இவ் வங்கியின் கொள்ளை விபரம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (மா)

## மணிவாக்கு

''எல்லா மனிதர்களுமே நீண்ட காலம் வாழ விரும்புகிறார்கள். ஆனல் எவரும் முதுமையடைய விரும்புவதில்லை.''

— ஜோனதான் ஸ்விப்ட்

# நமது நோக்கு

## பகைமைப் போக்கை கைவிடவேண்டும்!

தெரிந்தெடுக்கப்பட்ட 30 ஆயிரம் சிங்களக் குடும்பங்களுக்கு பயிற்சியளித்து ஆயுதங்களும் வழங்கி வடக்குக் கிழக்குப் பகுதிகளில் குடியமர்த்துவது அரசின் அடுத்த திட்டம். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி இவ்விடயத்தையே இப்போதெல்லாம்அடிக்கடி சொல்லி வருகிறார்.

கடந்த 18ம் திகதிஅமைச்சர் பத்திரிகையாளரிடம் வெளியிட்ட இத் திட்டம் பற்றிய விபரத்துக்குஇந்திய தொடர்பு சாதனங்கள் மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளன. அகில இந்திய வானெலி 19-ம் திகதி முழுவதும் தனது சகல செய்தி அறிக்கைகளிலும் இச்செய்திக்கு முதலிடம் கொடுத்து ஒலிபரப்பியது.

இனப் பிரச்னையைத் தீர்ப்பதில் இலங்கை அரசு மேற்கொண்டுவரும் விசித்திரப் போக்கு பற்றி இந்தியாவில் எவ்வாறான அபிப்பிராயம் உருவாகி வருகின்றது என்பதையே இது காட்டுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப் படுவதுபோல், தமிழ் மக்களும் தென்பகுதிகளில் வந்து குடியேறலம் என்று அமைச்சர் கூறியுள்ளார். ஆனல்அவர்களுக்கும் ராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்படுமா என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. சிங்களக் குடும்பங்களை தீவிரவாதிகள் தாக்கிவிடுவார்கள் என்ற அச்சமிருக்குமானல் தெற்கில் தமிழர்களை இனவாதிகள் தாக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இங்கு குடியமர்த்தப்படும் சிங்களவர்கள் எம்மாதிரி தொழில்களில் ஈடுபடுவார்கள், உள்ளூர்வாசிகளுடன் எவ்வாறு உறவு கொள்வார்கள் என்பதெல்லாம் அறிவிக்கப்படவில்லை. இங்கு ஏற்கனவே ராணுவம் குடிகொண்டுவிட்டது போல், இவர்களும் சதா ஆயுதங்களையும், படைகளின் பாதுகாப்பையும் நம்பியே வாழ வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படும்.

நாட்டில் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இது எந்த வகையிலும் உதவப் போவதில்லை மாருக இனப் பூசலையும்குரோதத்தையுமே மேலும் சிக்கலாக்கி வளர்க்கும் என்பதே உண்மை.

தமிழ் மக்கள் பாரம்பரியமாகப் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பிரதேசங்களில் சிங்கள மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றுவதென்பதை டி. எஸ். சேனநாயக்க காலத்திலிருந்தே தமிழரும் அவர்களின் அரசியல் கட்சிகளும் எதிர்த்து வருகின்றனர். இனப்பிரச்னையில் இது ஒரு முக்கிய அம்சமாகவே இருந்துவருகின்றது.

பதவியிலிருந்த அரசுகளுடன் நடத்தப்பட்டுள்ள பேச்சுக்களிலும், செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களிலும் இவ்விடயம் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளதையும் எவரும் மறைத்து விட முடியாது.

எனவே அமைதியாகவும் ஒற்றுமைஉறவுடனும் வாழ வேண்டிய இரு சமூகத்தினருக்கு இடையில் தொடர்ந்தும் பகைமையை விரிவுபடுத்தக்கூடிய இத்திட்டம் பற்றிய பிரசாரம் கைவிடப் படப்படுவது அவசியம்.

வடக்கு கிழக்கு மாகாண மக்களுடனும், அண்டை நாடான இந்தியாவுடனும் இலங்கை அதிகாரிகள் தேவையற்றமுறையில் வளர்த்து வரும் பகைமைப் போக்கைக் கைவிடவேண்டியது இன்று இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படும் ஒன்று

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறிய கடற்படையினரை மாத்திரமல்ல, இலங்கை மீனவர்களையும் இந்திய அதிகாரிகள் கைது செய்ய ஆரம்பித்துள்ளார்கள். கடற்படையினரை மீபதற்கு பெருமுயற்சி எடுக்கும் இலங்கை வெளி உறவு அமைச்சர் அங்கு கைதாகியுள்ள இலங்கை மீனவர்களையும் விடுவிக்க முயற்சி எடுத்தாகவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இலங்கை இனப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ள உதவக்கூடிய ஒரே ஒரு நாடு இந்தியாதான் என்பதை இலங்கை அதிகாரிகள் இன்னமும் உணராமலிருப்பது கவலைக்குரியது அதனை உதாசீனம் செய்துவிட்டு எங்கோ இருக்கும் அமெரிக்காவின் ஆயுதங்களில் நம்பிக்கை வைப்பது நாட்டின் எதிர்காலத்துக்கே ஆபத்து.

## வவனியாவிலிருந்து வந்த பஸ்!

(யாழ்ப்பாணம்)

வவனியாவிலிருந்து நேற்று பிற்பகல் பஸ் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது வழியில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லைஎனப் பிரயாணிகள் தெரிவித்தனர்!

வவனியாவில் நேற்று உள்ளூர் பஸ்சேவை மட்டும் நடைபெற்றது என்று அந்த பஸ் ஊழியர் தெரிவித்தார். (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

### பாதுகாப்புத் தேடி

# யாழ். கோட்டைக்குள்

# செல்லும் காணிப்பதிவேடுகள்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணம் காணிக்கந்தோரிலுள்ள காணிப்பதிவேடுகளும், சுமார் 50 வருடத்துக்குப்பிந்திய உறுதிகளும், யாழ். கோட்டைக்குள் பாதுகாப்புக்கருதி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனல் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

காணிப் பதிவேட்டுப் புத்தகங்களையாவது காணிக்கந்தோரில் பாதுகாப்புடன் வைக்குமாறு, நொத்தாரிசுமார் கொண்ட குழுஒன்று இன்று மேலதிகாரிகளைச் சந்தித்துவற புறுத்தவுள்ளதாக கூறப்படுகிறது.

யாழ். கோட்டைக்குள் வைக்கப்படவிருக்கும் காணி உறுதிகளை அங்குசென்று பொதுமக்கள் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென்றும், இதற்கு 5-6 மாதங்கள் வரை செல்லலாம் என்றும் தெரியவருகிறது

சாவகச்சேரி நீதிமன்றம் தாக்கப்பட்டதையும் தீவைக்கப்பட்டதையும் தொடர்ந்து இப்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதாக, யாழ் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [மா]

## ரூ. 300 லட்சம் சேதம்!

[கொழும்பு]

முறிகண்டி குண்டு வெடிப்பில் சேதமடைந்த ரயில் பெட்டிகளின் பெறுமதி 300 லட்சம் ரூபாக்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சேதமடைந்த ரயில்பாதையைச் சீர்செய்ய பலவாரங்கள் செல்லலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வடபகுதிக்கான ரயில் பாதை சீர்செய்யப்படும் வரை மதவாச்சி வரையே இச்சேவை இடம்பெறும் இன்றுமுதல் மதவாச்சி வரையிலான ரயில் சேவை ஆரம்பமாகின்றது. [கி]

## 'அரஸ்கோ' அரசரத்தினம் காலமானர்

[யாழ்ப்பாணம்]

பிரபல தொழிலதிபரும்-சமூகசேவையாளருமான ''அரஸ்கோ'' அரசரத்தினம் சென்னையில் காலமானர்!

வடபகுதி பழவகையிலிருந்து பானங்களை உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்துவந்த அரஸ்கோ நிறுவனத்தின் நிர்வாகியான திரு. அரசரத்தினம் சமூகசேவையில் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

யாழ். றேட்டறிக் கழகத்தில் பல முக்கிய பதவிகளை இவர் வகித்தவர்என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிக் கிரியைகள் சென்னையிலேயே நடக்கவிருக்கறது. (கி)

## பிரிவினை...

1-ம்பக்கம்5கலத் தொடர்ச்சி)

மத, பேதங்களுக்கு அப்பாற்பட்டவகையில் அமையும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இத்தகைய குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளிலிருந்தும் 100 பேரைத்தெரிவு செய்யும்படி எம்பிக்களைக் கேட்டுள்ளேன்'' என்றார். [வெ]

## 'ரெலோ...'

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

வாதிகளை பலிகொள்ள வைத்துள்ளோம்'' என்று கூறப்பட்டுள்ளது.

### 100 இராணுவ வீரர்கள் மரணம்

முறிகண்டியில் யாழ்தேவி ரயில் குண்டுவைத்து தகர்க்கப்பட்ட சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்புவதாக 'தமிழீழ விடுதலை இயக்கம்' செனனையில் தெரிவித்துள்ளது.

இந்த ரயில்தகர்ப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஆனையிறவிலிருந்து ஸ்தலத்துக்கு வந்த ராணுவ வாகனத்தைத் தாம் தாக்கியதாகவும் அச் சம்பவத்திலும் 40 ராணுவ வீரர்கள் பலியானதாகவும் தமிழீழ விடுதலை இயக்கத்தினர் சென்னையில் நேற்றுத் தெரிவித்தனர்.

## ரயில்தாக்குதல் 35 பேர் ஈடுபட்டனர்

(கொழும்பு)

சுமார் '35 தீவிரவாதிகள்' முறிகண்டி ரயில் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று இராணுவ வட்டாரங்கள் மதிப்பிட்டுள்ளன.

ரயில்பாதையில் குண்டுகளை வைத்து பெட்டிகளைத் தகர்த்ததுடன் தண்டவாளத்துக்கு இருபுறமும் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து துப்பாக்கிப்பிரயோகமும் சரமாரியாக இத் தாக்குதல் சம்பவத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கி)

## இடிபாடு...

[1-ம்பக்கம்-ம்கலத்தொடர்ச்சி]

பெட்டிகள் தலைகீழாகத் தூக்கி வீசப்பட்டுள்ளன. தண்டவாளங்களும் பல்வேறு கோணங்களில் வளைந்திருக்கக் காணப்படுகின்றன.

சம்பவம் இடம் பெற்ற பகுதி பரந்த காட்டுப்பிரதேசமாகவுள்ளது இதனல் இங்கு ரயில் பெட்டிகளை அப்புறப்படுத்தும் சாதனங்களைக் கொண்டுவர முடியாதிருக்கிறது. ரயில்வேப் பகுதி சாதனங்களும் பாதைகள் சீர்கெட்டுள்ளதால் ஸ்தலத்துக்கு வர முடியாதுள்ளன.

ஆட்பலம் மூலமாகவே மீட்பு வேலைகளும், சிதைவுகளை அப்புறப்படுத்தும் பணிகளும் இடம் பெறுகின்றன.

இதேவேளை வெடிவைக்கப்பட்ட ரயில்பெட்டிகளில் இருந்த இராணுவ வீரர்களின் உடமைகளும் சிதைந்து சிதறுண்டு கிடந்தன. இவற்றில் றேடியோ பெட்டிகள், வீடியோ டெக்குகள் மற்றும் சில பெறுமதிமிக்க பொருட்களும் காணப்டுகின்றனஎன்று தெரிவிக்கப்பட்டது

பல ரைபிள் துப்பாக்கிகளும் முறிவடைந்து, உருமாறிய நிலையில் காணப்படுகின்றன.

இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களை அடையாளம் காணுவது சிரமமாகவே இருக்கின்றது. பல சடலங்கள் உருக்குலைந்துள்ளன. இதனல் பலரை அவர்களின் உடல் அடையாளங்களைக் கொண்டு அடையாளம் காணமுடியாதுள்ளது.

சீருடைகள் மூலமாகவே இராணுவ சிப்பாய்கள் பலரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனஎன்று கூறப்பட்டது. (கி)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவக்கொழுந்து

புளியங்கூடலைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து காலமானர். அன்னர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், மோகனகாந்தி நிர்மலா தேவி, நவரட்ணராசா (இத்தாலி), வசந்தன், சிவகுமார் [வித்தியா மோட்டோர்ஸ்], ஜெயகுமார், விஷ்ணுகாந்தி, சரோஜினிதேவி ஆகியோரின் தாயாரும் சிவசுப்பிரமணியம், சந்திரலிங்கம் (ராஜா கூல் பார்) ஆகியோரின் மாமியாரும். வைத்தியலிங்கம் காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் சகோதரியுமாவார் அன்னரது ஈமக்கிரிகைகள் 22-1-85 செவ்வாய்க்கிழமை காலை பத்துமணியளவில் புளியங்கூடலில் உள்ள அன்னரது இல்லத்திலிருந்து தகனக்கிரிகைகளுக்காக சுருவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 1469

## மரண அறிவித்தல்

### இரத்தினம்பிள்ளை அரசரட்ணம்

(முன்னைநாள் உரிமையாளர் இயக்குநர் அரஸ்கோ எக்ஸ்போற் லிமிற்றெட்)

திரு அரசரட்ணம் 20 - 01 - 85 அன்று சென்னையில் காலமானர்

இவர் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், விமலாம்பாள், பத்மினி ஸ்கந்தகுமார் (U. K.) சாந்தினி [அஸ்திரேலியா] செந்தில்குமார் [பிரான்ஸ்] ரமணி நளினி ஆகியோரின் அன்புத்தந்தையும், ருத்திரலிங்கம், தஞ, இந்திரா, ஆனந்தராசா, சசிகலா, ராஜமனோகரன் ஆகியோரின் மாமனாரும், செந்தூரன் அநுத்தரா, லவன்யா, சுகன்யா, மயிலன், சேயோன், குமரபபிரியா, ரம்யா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னரின் ஈமக்கிரிகைகள் சென்னையில் நடைபெறும்

உற்றார், உறவினர், யாவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: எஸ். ருத்திரலிங்கம் ''கந்தன் அருள்'' 54 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1464